# காலைக்கிரணங்கள்

1



ஸ்வாமி பூமானந்த தீர்த்தர்

## வைகறை பிரகாசமாகியது

ஆச்ரமம் என்பது ஒரு குருசன்னிதியாகும். தெய்வத்தை வழிபட, ஒருவர் கோவிலுக்கு போகலாம். ஆனால் அவர் ஆச்ரமத்திற்கு வருவது, அங்குள்ள மஹாத்மாவின் அருகாமையில் வாழ்ந்து வளர்ச்சியடையவே. ஒரு மஹாத்மாவிற்கு தனக்கென எதுவும் தேவையில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம், தன்னிடமுள்ள ஞானம்,தவம் எனும் நிதியை, அதை ஏற்றுக்கொள்ள வரும் அனைவருடனும் ஆர்வத்தோடு பகிர்ந்து கொள்வதேயாகும்.

எனவே, ஒரு ஆச்ரமத்தின் எல்லா அனுஷ்டானங்களும், நடவடிக்கைகளும், மஹாத்மாவுடனான தொடர்புகளையே ஆதாரமாக கொண்டுள்ளது. அவருடைய அறிவும், அனுபவமும் நிறைந்த சொற்களைக் கேட்பதும், அவருக்கும், அவருடைய பொதுச் சேவைக்கும், எல்லா வழிகளிலும் தொண்டாற்றுதலும், மட்டுமன்றி, தன்னுடைய தன்னிச்சையான, மேலான செயல்கள் மூலம், அவரிடம் பூர்ணபக்தியையும், நன்றியையும் அறிவித்தலுமே சாதகர் செய்யவேண்டியன. ஒரு மஹாத்மா அல்லது சத்குருவை புகலிடமாகக் கொள்ளும் சாதகருக்கு, கோவில் வழிபாடு போன்றவைகளிலுள்ள ஈடுபாடு இயற்கையாகவே குறைந்து விடும்.

பக்தர்கள், சீடர்களின் ஆன்மீக வளர்ச்சியினிடையே, நாராயணாச்ரம தபோவனத்தின் தினசரி கார்யக்கிரமங்களிலும் இயல்பாகவே மாற்றம் ஏற்பட்டன. 1995, டிசம்பரில், மாஜி, காலையில் பூஜ்ய ஸ்வாமிஜியின் திருப்பாதங்களில் பூக்களை சமர்பிக்கும், புஷ்ப சமர்ப்பணம் என்னும் நிகழ்ச்சியையும், அதனுடன் குரு தத்வம் பற்றிய உணர்வு நிறைந்த ச்லோகங்களை ஒருங்கே ஜபித்தலையும் அறிமுகப்படுத்தினார். அமைதியான காலை வேளையில், மனத்தூய்மையும், ஊக்கமும் அருளும் இம்மேலான நிகழ்ச்சி அனைவர் மனதையும் கவர்ந்தது. ஆனால் இக்கார்யக்கிரமம் பூஜ்யஸ்வாமிஜியின் அருள்வாக்குகள் இன்றி முழுமையடையாது என நாங்கள் எண்ணினோம். இதற்கு வழக்கமான வேலைகளிலிருந்து நேரம் ஒதுக்குவது பற்றிய வினாவும் எழுந்தது.

அவ்வாறு, 1996, குருபூர்ணிமா முகாமின் போது, பூஜ்யஸ்வாமிஜி, புஷ்ப சமர்ப்பணத்தின் முடிவில் ஆன்மீகக்கருத்துக்களைத் தெளிவு படுத்தி ஒரு சில வார்த்தைகள் பேசினார். சாதனையைப் பற்றிய ஆழ்ந்த கருத்துக்கள், பிரகாசமான காலைக் கிரணங்கள் போன்று, அடிக்கடி அது கேட்போர் மனதின் இருண்ட மூலைகளிலும், ஒளியூட் டுவதாக இருக்கும். மற்றும் சில சமயங்களில், எல்லையில்லாத் தன்மை யிலிருந்து ஆழ்ந்தகருத்துக்களை ஏற்றுவரும் தாழ்ந்த குரல், கேட்போரில் தியான மனோநிலையை ஏற்படுத்தி, அவர்களைக் கறை படாத வான்வெளியான ஆத்மானுபவத்திற்கே எடுத்துச் சென்றது. அவ்வுரையின் பயனை எல்லோரும் உணர்ந்ததால், இந்த அறிவுரை களை நாள்தோறும் உட்படுத்தும் விதமாக, கார்யக்கிரமம் மாற்றிய மைக்கப்பட்டது.

விரைவிலேயே, ஆச்ரமவாசிகள், பிரகாசமான இக்காலை நேரத்தை, மற்ற பக்தர்கள், சாதகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைந்தனர். இவ்வாறாக, நம் மாதப் பத்திரிகையான 'விசாரசேது' வில் 'பிரபாத-ரச்மி' என்னும் தொடரும் துவங்கப்பட்டது. இப்புத்தகம் அம்முயற்சியின் இயல்பான தொகுப்பேயாகும். இவ்வுரைகளை எழுத்துவடிவில் வெளியிடத் தக்கவாறு தயார் செய்ய வேண்டியிருந் தது. அதே சமயம், பேச்சின் இயற்கையான போக்கும், மனோபாவமும் அதே போன்றிருக்க, பல இடங்களிலும் மொழி பிறழாமல் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில், குரல், மனோநிலை, சூழ்நிலை இவற்றை அப்படியே இதில் கொண்டுவர முடியாமையால், அதன் சொல்மணத்தைச் சற்றே இழந்திருக்கும். இப்பதிப்பு தீவிரமான சாதகர்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள அடிப்படை சாதனை யில் ஊக்கத்தையும், தூய்மை, விரிவாக்கம், ஞானோபதேசம் இவற் றின் பாதையில் நம்பிக்கையோடு பயணிக்கவும் உதவினால், எங்கள் எண்ணம் நிறைவேறியதாக உணர்வோம்.

நாராயணாச்ரம தபோவனம்

டிசம்பர், 2000. ஸ்வாமி நிர்விசேஷானந்த தீர்த்தர்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனது - சுத்தமும் அசுத்தமும் | 1 |
| 2. | பந்தமும் மோக்ஷமும் | 3 |
| 3. | இறப்பும், இறவாமையும் | 7 |
| 4. | ஜபிக்கும் வாக்குகளோடு ஒன்றிவிடல் | 13 |
| 5. | மனத்தூய்மையும் தியானத்தின் முழுமையும் | 17 |
| 6. | மேன்மை | 23 |
| 7. | எல்லாம் தெய்வீகம் | 29 |
| 8. | மங்கள எண்ணத்தை நீங்களே உருவாக்குங்கள் | 33 |
| 9. | ஒவ்வொரு கணத்தையும் தெய்வீகமாக்குங்கள் | 37 |
| 10. | தியானம் - நோக்கமும், வரம்பும் | 43 |
| 11. | எங்கும் ஆத்ம தரிசனம் | 55 |
| 12. | ஆத்மஸாக்ஷாத்காரம் - எப்பொழுதுக்குமான சாதனை | 65 |
| 13. | பற்று விடல் - நல்வாழ்விற்கான சரியான வழி | 75 |
| 14. | துறவு - வாழ்வின் வளர்மகுடம் | 85 |
| 15. | மோக்ஷம் என்பதன் உண்மைப் பொருள் | 95 |
| 16. | பரந்த மனமே சாதனையின் லட்சியம் | 101 |
| 17. | பன்மையிலிருந்து ஒருமைக்கு | 111 |
| 18. | மனநிறைவு | 117 |
| 19. | சமாதியும், அதற்கப்பாலும் | 121 |

| | | |
|---|---|---|
| 20. | ஆத்மானுபூதி - எத்தனை காலம் சாதனை தொடர வேண்டும்? | 127 |
| 21. | அஹங்காரமும், மமதையும் - ஒழிப்பது எப்படி? | 133 |
| 22. | வாழ்வின் நான்கு நிலைகள் | 139 |
| 23. | ஆத்ம பரிசோதனை | 145 |
| 24. | ஞானத்திலிருந்து ஞானிக்கு, இறைவனிலிருந்து பக்தனுக்கு | 149 |
| 25. | ஆசார்யோபாஸனையும், அஹங்கார ஒடுக்கமும் | 153 |
| 26. | ஆன்மீக வாழ்வின் மதிப்பறிதல் | 159 |
| 27. | மஹா சங்கமம் | 165 |
| 28. | சிரத்தை - யாவற்றினும் உள்நோக்கம் | 171 |
| 29. | வேதாந்தம் - வாழ்க்கையிலும் செயல்களிலும் | 179 |
| 30. | சுய முயற்சி - ஆன்மீக வாழ்வில் | 185 |
| 31. | பக்தியின் ஆனந்தம் | 191 |
| 32. | ஜோதிடமும் மாற்றில்லா பக்தியும் | 195 |
| 33. | சிரத்தை - சாதகரின் தலைசிறந்த ஒழுக்கம் | 201 |
| 34. | மனத்தூய்மை | 207 |
| 35. | தீக்ஷையும் பின்தொடரும் சாதனையும் | 215 |
| 36. | ஆச்ரம சேவையே குரு சேவை | 221 |

# 1 மனது - சுத்தமும் அசுத்தமும்

1996 டிசம்பர் 9

*[திருச்சூரிலிருந்து ஹரி, கிராமத்திலிருந்து சுதீர், அமெரிக்காவிலிருந்து நிஷாவும், பரத்தும், மஸ்கட்டிலிருந்து ராமஸ்வாமியும், கோலாழியிலிருந்து பிரபாகரன் முதலியோருடன் மாஜியும் நயா ஸ்வாமிஜியும் அங்கே கூடியிருந்தனர்.*

*புஷ்ப சமர்ப்பணத்துக்கு பின் தாழ்வாரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு, பக்தர்கள் அனைவரும் ஸ்வாமிஜியின் காலடியின் முன்பாக விரிப்புகளை விரித்து அமர்ந்தனர். தாழ்ந்த கண்ணிமைகள், கதிரவனின் தவழும் பொற்கிரணங்கள், அமைதிக்கும் அணிகலனோ? ஸ்வாமிஜி உபநிஷத் ச்லோகம் ஒன்றை, ஆழ்ந்த பழமைப்பொலிவுடன் உச்சரித்து, பின்னர் அதனைப் பகுதிகளாகப் பிரித்து மற்றவர்களையும் திரும்பக்கூறச் செய்தார்.]*

**மனோ ஹி த்விதம் ப்ரோக்தம் சுத்தம் சாசுத்தமேவச |**
**அசுத்தம் காமசங்கல்பம் சுத்தம் காம விவர்ஜிதம்||**

मनो हि द्विविधं प्रोक्तं शुद्धं चाशुद्धमेव च ।
अशुद्धं कामसङ्कल्पं शुद्धं कामविवर्जितम् ।।

இது ப்ரம்மபிந்து உபநிஷத்திலிருந்து ஒரு ச்லோகமாகும். (ச்லோகம்-1) சுத்தம், அசுத்தம் என்று மனம் இரு வகைப்படும். அசுத்தமான மனம் முழுவதும் ஆசைகளால் நிரம்ப பெற்றது. ஆசைகளற்றது சுத்தமனம்.

ஆசைகள் தான் மனதின் அசுத்தங்கள். ஆசைகளைக் களைந்த மனம்

தூய்மையாகிறது. ஆசைகளை விட்டு ஒருவன் வாழமுடியுமா என்று மக்கள் சந்தேஹிக்கின்றனர். நாம் ஆசைப்படுவதால் உயிர் வாழ்கிறோமா அல்லது நாம் வாழ்வதால் ஆசைப்படுகிறோமா? ஆசைகள் இல்லாமல் வேலை செய்வது சாத்தியமில்லை என்று எண்ணுவது தவறாகும். நாம் இயல்பாக வாழத் தெரிந்துகொண்டால், நம்மை ஊக்குவிக்கும் சக்தி, ஆசைகளே அல்ல என்பது புரியும். பூமி சூரியனைச் சுற்றி வர எந்த அவா தூண்டுகிறது? மரங்கள் வளர்வதும், பூப்பதும் ஆசையின் உந்துதலிலா? உண்மையில், முழுமையாகவும் திறமையாகவும் நாம் செயல்பட ஆசைகள் தடையேயாகும்.

கூர்ந்த கவனத்தாலும் முயற்சியாலுமே மனதின் மாசுகளை நீக்க முடியும். மனம் தன் நெடுநாள் வழக்கத்தின் காரணமாக உலகப் பொருள் களுடன் ஈடுபடுகிறது. தன்னுள்ளிருக்கும் காண்பவனை அது அறிவதில்லை. பிறப்பிலிருந்தே வெளி நிகழ்வுகளைக் கவனிப்பதே அதற்கு வழக்கம். உலகப்பொருட்களுடனான இடையற்ற ஈடுபாடே ஆசைகளுக்கு காரணம். எப்பொழுதும் உள்ளிருக்கும் ஆத்மாவை பிரதிபலிப்பதே, மனதை ஆசைகளற்றதாக்கும் பண்பாகும்.

**தெளிவான, தூய்மையான மனம், உலகைப் ப்ரதிபலிப்பது போலவே, இப்பிரபஞ்சத்தின் பின்னுள்ள ஒரே சத்தியமான இறைவனையும் பிரதிபலிக்கும். ஆகையால் அம்மனம் வெளி உலகத்தால் பாதிக்கப்படுவதில்லை. ஆகாயத்தைப் போல் அது கறைபடாததாகவே உள்ளது. அப்படிப்பட்ட மனம் பிரம்மமே யாகும்.**

ஆனந்தமே நம் மனதின் இயற்கை நிலையாகும். ஆனால் இவ்வுலக வாழ்க்கை தோற்றுவிக்கும் கறைகளால் நாம் அதை உணர முடிவதில்லை. தூய்மையினால் மனம் லேசாகவும், தெளிவாகவும் ஆகிறது. அது விரிவடைந்து எதனினும் கட்டுண்று நில்லாமல், அனைத்தையும் அரவணைத்துச் செல்கிறது. முடிவில் அஹங்காரம் வீழ்கிறது. மற்றவரி லிருந்து வேறுபட்டவன் நான் என்ற உணர்வும் மறைகிறது. ஆயினும் அவரவரின் தனித்தன்மை நிலை நிற்கிறது.

ஹரி: ஓம் தத் ஸத்